

கோவை மாநகர கழக முன்னாள் செயலாளர் கோவை தென்றல் மு.இராமநாதன் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதைச் செலுத்தினர். இதில் கழக சொத்து பாதுகாப்புக்குழு துணைத்தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி திருவெறும்பூர் தொகுதியில்

# வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

திருச்சி, மே 10-

திருச்சி தெற்கு மாவட்டம், திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட பனையக்குறிச்சி, கீழமுல்லக்குடி, வேங்கூர், நடராஜபுரம், அரசங்குடி, கிளியூர், பத்தாளபேட்டை, திரு நெடுங்குளம், கிருஷ்ண சமுத்திரம், வாழவந்தான் கோட்டை ஆகிய பகுதிகளில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் . முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனக்கு வாக்களித்த வாக்காளர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.



மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளின் முக்கிய வீதிகளின் வழியாக சென்று வாக்காளர்களைச் சந்தித்த வேட்பாளர், தனக்கு ஆதரவளித்த பொதுமக்களுக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகளும், கழகத்தின் முக்கிய நிர்வாகிகளும் இந்த நன்றி அறிவிப்பு நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கேரளாவில்

# காங்கிரஸ் தலைமைக்கு எதிராக மாநிலம் முழுவதும் போராட்டம்!

திருவனந்தபுரம், மே10-

கேரளாவில் காங்கிரஸ் தலைமைக்கு எதிராக மாநிலம் முழுவதும் அக்கட்சியின் தொண்ட ர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கேரள சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்ற நிலையில், கடந்த 5 ஆண்டுகளாக எதிர்க்கட்சி தலைவராக இருந்த வி.டி.சதீஷனை முதலமைச்சராக அறிவிக்க வேண்டும் என தொண்டர்கள் தலைமைக்கு வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் தேர்தலில் போட்டியிடாத கே.சி.வேணுகோபால், ராகுல்காந்தி மூலம் புறவாசல் வழியாக முதலமைச்சர் பதவியைப் பிடிக்க முயற்சிப்பதாக வி.டி.சதீஷன் தரப்பு குற்றம் சாட்டி வருகிறது.

இதனிடையே காங்கிரஸ் தலைமைக்கு எதிராக அக்கட்சி தொண்டர்கள் தலைமையின் உத்தரவையும் மீறி மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவனந்தபுரத்தில் உள்ள தலைமைச் செயலகம் முன்பு நடைபெற்ற போராட்டத்தின்போது, கே.சி.வேணுகோபாலின் பேனர்கள் கிழிக்கப்பட்டு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. திருச்சூரில் மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தை பூட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். கோழிக்கோடு, மலப்புரம் உள்ளிட்ட நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கோயில் சொத்து பாதுகாப்பு விவகாரம்!

## உயர்நீதிமன்றம் கண்டனம்!

சென்னை, மே10-

'கோயில் சொத்துகளைப் பாதுகாக்க சம்பளம் பெறும் அதிகாரிகள், தங்கள் பணிகளை முறையாகச் செய்வதில்லை' என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள பிரசித்தி பெற்ற கண்ணனூர் மாரியம்மன் கோயிலுக்கு தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், ஆந்திரா மற்றும் கேரளாவில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், சேலத்தைச் சேர்ந்த ஏ.ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.


அதில், 'இந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் கையில் சிக்கியுள்ளது. அதை மீட்க அறநிலையத் துறை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோயில் நிலங்களில் உள்ள கனிம வளங்களும் சட்டவிரோதமாக கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன. எனவே கண்ணனூர் மாரியம்மன் கோயிலுக்கு பாத்தியப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, பக்தர்களின் பயன்பாடுகளுக்காகப் பயன்படுத்த வேண்டும். சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கை கடந்த வாரம் விசாரித்த உயர் நீதி மன்ற நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், சி.குமரப்பன் ஆகியோர் அமர்வு, 'தனிநபர்களின் ஆக்கிரமிப்பில் உள்ள இந்த கோயில் சொத்துகளை மீட்க இணை ஆணையர் அந்தஸ்துக்கு குறையாத அதிகாரி ஒருவரை நியமித்து, எடுத்த நடவடிக்கைகள் குறித்து உயர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கு ஏதுவாக அடுத்த விசாரணையின்போது அறநிலையத்துறை தரப்பில் சேலம் இணை ஆணையர் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்' என உத்தரவிட்டிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வெ.மணிமொழி

### மே 10 (1993)



கிராம தபால் நிலையத்தில் பணிபுரிந்த இவர், கழகக் கொள்கைமீது கொண்ட பற்றின் காரணமாக, தனது பணியை துறந்து, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கழகத்தின் துவக்க காலத்தில் ஆலங்குடி பகுதியில் வட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

ஊராட்சி மன்ற தலைவர், தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் போன்ற பதவி வகித்தவர்.

நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்ப்பட்டு சிறை சென்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

# நன்றின்பால் உய்ப்பது அறிவு!

## 'கணையாழி' தலையங்கம்!

திருவள்ளுவர் வாக்கை மீண்டும் மீண்டும்
நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது
"நன்றின்பால் உய்ப்பது அறிவு"

கனடா நாட்டில் தொரோண்டோ மாநகரில்
ஈழத் தமிழர்கள் முன்னெடுப்பில்
அக்டோபர் மாதம் நடக்க இருக்கிறது
தமிழ் மாநாடு!

மிரட்டிக் கொண்டிருக்கிறது
எல்லோரையும் செய்யறிவு!

கடந்த காலங்களைப் போல
இதையும் எதிர் கொண்டு .
ஏற்றுக் கொண்டு வளரத்
தயாராகிக் கொண்டிருக்கிறது
தமிழ்மொழியின் அடையாளத்தை அறிவிக்கக் கனடா நாட்டில் தமிழ் மாநாடு!

செய்யறிவு உலகில்
செம்மொழித் தமிழும் தமிழரும்
கருப்பொருள் ஆகியிருக்கிறது.

இலக்குரையாகி இருக்கிறது
"நன்றின்பால் உய்ப்பது அறிவு"

தமிழும் செய்யறிவும்
மெய்ப்பொருளியலும் பண்பாடும்
பொருளியல் சிந்தனையும் வாழ்வியலும்
தமிழர் வரலாறும் வாழ்வியலும்
வட - கிழக்குப் பொருண்மிய மேம்பாடு-
வகைப்பாடுகளில் ஆய்வரங்கம்!

ஆய்வுச் சுருக்கம் கேட்டு அறிக்கை வந்திருக்கிறது.
அளிப்பதற்கான இணையதளம்
www.GlobalTamilConference.org

வாழ்தல் வேண்டிச் சென்றவர்கள்
செய்யறிவு உலக நெருக்கடியிலும் தலைமுறைகளைத்
தமிழோடு இணைத்துத் தமிழ் வாழவும் வளரவும்
தங்களது
பொறுப்பின் வெளிப்பாட்டைக் காட்டுகிறார்கள்!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணாமல்
இறைவனின் முகத்தில் தாங்கள் சிரிக்க
ஊர் ஊராக ஓடிக் கொண்டிருப்பவர்கள்
இடையே தமிழின் நலம் தேடுகிறார்கள்
புலம் பெயர்ந்தவர்கள்!

ஆரவார விளம்பரங்களை விட
அறிவுக்கு முதலிடம் தருகிறார்கள்!
ஏனெனில், அறிவே சக்தி! அறிவே விடுதலை!
என்பதை அறிந்தவர்கள் அவர்கள்!

அறிவுடையார் எல்லாம் உடையார்
என்றார் திருவள்ளுவர்!
அறிவு என்பது கல்விக் கூடங்களின்
விளைச்சல் மட்டுமல்ல!
வாழ்நாள் முழுதும் கற்றல்!

புலம் பெயர்ந்தவர்கள்
கற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

தன்னை அறிதலே தலையாய அறிவெனில்,
அறிந்திருக்கிறார்கள் அயலகத் தமிழர்கள்!
அறிவு என்பது அறியாமையை அறிதல்! ஒவ்வொரு
காலமும் சிலருக்காவது அதை உணர்த்திப் போகும்!

அறிவு என்பது உண்மையைத் தேடுதல்,
நல்லதைத் தேர்ந்தெடுத்தல்!

அதிகாரம் சிலருக்கு
மகிழ்ச்சியைத் தரலாம்;
ஆனால் அறிவு மட்டுமே
மதிப்பைத் தரும் என்பது
அனுபவ உரையாகி இருக்கிறது
அயலகத் தமிழர்களுக்கு!

காயங்களின் படிப்பினைகள்
அவர்களுக்கு ஞானத்தின் ஊற்றுக் கண்கள்!
வியக்க வைக்கின்றன வெற்றி-தோல்வி
கணக்குகளைத் தாண்டிய,
மக்கள் மனநிலையின் ஆழமும்
வாழ்வை எதிர்கொள்ளும் நம்பிக்கையும்!

மனம் போன போக்கில்
அறிவைப் போக விடாமல்-
சமுதாய நலனில் பொறுப்பேற்கிறார்கள்!

"சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற
திருக்குறளின்





இரண்டாவது வரியை
தமிழ் மாநாட்டின்
இலக்குரையாக்கி இருக்கிறார்கள்!

அதிகாரப் போட்டியில்
உலகம்
அமைதி இழக்கிற காலத்தில்
யாதும் ஊரே! யாவரும் கேளிர்! எனும்
உலக மானுட நேயத்தை
இரண்டாயிரம் ஆண்டுகளாக
எடுத்தோதும் தமிழைக் கொண்டாட
கனடாவில் மாநாடு!

கனடா தனி ஒரு நாடு இல்லை
அது, நாடுகளின் நாடு!

யாதும் ஊரே என்பதற்கு
இடம் தரும் நாடு!
சமூக நீதி, பொருளாதார முன்னேற்றம்
தருகிறவர்களை மதிக்கிற நாடு.

மக்களின் மனக்குறைகளையும்
பதிவு செய்து பரிவு காட்டும்
ஜனநாயகப் பண்புடைய நாடு!

மக்களை
"நன்றின்பால் உய்ப்பது"
அவர்களின் அறிவும் நம்பிக்கையும்!

குறை கூறுவதற்குப் பதிலாக,
மக்கள் நம்பிக்கையைப் பெற
நம்பகமான வழிகளையும்
கண்டடைய முயற்சி செய்பவர்கள்!

மக்கள் நலனுக்கான போட்டிதான்
ஜனநாயகத்தை வளப்படுத்தும் என்பதை
உலகுக்கு உணர்த்த விரும்புகிறவர்கள்!

தமிழ் மரபுக்கான
மாதத்தை ஒதுக்கித்
தைப்பொங்கலைக் கனடாவின்
தேசியத் திருவிழாவாகக்
கொண்டாடி வருபவர்கள்!

நல்லவற்றின் மீது
மக்களின் நம்பிக்கையை
நிலைநிறுத்துவதுதான்
அரசியலின் உயர்ந்த கடமை என்பதை
அன்றாடம் உணர்பவர்கள்!

அதிகாரம் என்பது இலக்கு அன்று;
அது ஒரு பொறுப்பு.
மக்கள் நலனுக்காக
உழைக்கும் மனநிலையைப்
பொறுப்பாக உணர்ந்து கொண்டாடி
வருபவர்கள்!

பொறுப்பை உணர்த்துவது அறிவு—
அதனால்தான்
இன்றைய செய்யறிவு உலகுக்கும்
வழிகாட்டும் ஒளியாக
மாநாட்டின் இலக்குரையாகத்
திருக்குறளைச் சொல்கிறார்கள்
"நன்றின்பால் உய்ப்பது அறிவு!"



-நன்றி
'கணையாழி'
மே - 2026

ம.ரா.